සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
Year End Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 10 | විෂයය / பாடம் / Subject: சைவநெறி | පත්‍රය / வினாத்தாள் / Paper: I,ii | කාලය / காலம் / Time: மணி3 |

1) "முற்றா வெண்திங்கள் முதல்வன்"எனப் போற்றப்படும் இறைவன்

1. விநாயகர் 2. இந்திரன் 3. சிவபெருமான் 4. முருகன்

2) கிழக்கிலங்கையில் அமைந்த திரௌபதி அம்மன் ஆலயம்

1. உடப்பு திரௌபதி அம்மன் ஆலயம்
2. நயினை திரௌபதி அம்மன் ஆலயம்
3. வேலணை திரௌபதி அம்மன் ஆலயம்
4. பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம்

3) " இராவணன் மேலது நீறு" ......என்று பாடியவர்

1. திருஞானசம்பந்தர் 2. சுவாமி விபுலானந்தர் 3. திருவாதவூரர் 4. திருநாவுக்கரசர்

4) சங்கம வழிபாடு மூலம் முக்தி அடைந்த நாயனார்

1. திருமூலர் 2. இயற்பகையார் 3. பூசலார் 4. சாக்கியநாயனார்

5) சிவபெருமானின் அருவுருத் திருமேனியாக விளங்குவது

1. சிவலிங்கம் 2. இட்டலிங்கம் 3. மகேஸ்வரன் 4. உருத்திரன்

6) 'ஏகாதசிபுராணம்'என்னும் நூலை எழுதியவர்.

1. ஆறுமுகநாவலர் 2. நடேசையர் 3. பரிமேலழகர் 4. வரதபண்டிதர்

7) நித்திய அன்னதானம் வழங்கப்படும் ஆலயமாவது

1. வெருகல் முருகன் ஆலயம் 2. செல்வச்சந்நிதி
3. நல்லூர் கந்தசுவாமி ஆலயம் 4. மண்டூர் முருகன் ஆலயம்

8) மெய்கண்டாரின் முதன்மைச் சீடராகதிகழ்ந்தவர்

1. மறைஞானசம்பந்தர் 2. ஊமாபதி சிவாச்சாரியார்

3. அருணந்தி சிவாச்சாரியார் 4. மனவாசகம் கடந்தார்

9) திருநாவுக்கரசர் முக்தியடைந்த தலம்

1. திருப்புகலூர் 2. திருவியலூர் 3. திருக்காளத்தி 4. திங்களூர்

10) சைவசித்தாந்தம்“சத்து“ எனக் குறிப்பிடுவது

1. பசு 2. அறிவு 3. பாசம் 4. பதி

11) திரிகரணங்களாக அமைபவை

1. தீ,காற்று,ஆகாயம் 2. மனம்,வாக்கு,காயம்

3. பதி,பசு,பாசம் 4. கண், மூக்கு,செவி

12) ஆலயங்களில் கந்தபுராணம் படிக்கப்படும் விரதகாலமாவது

1. கந்த சஷ்டி 2. திருக்கார்த்திகை 3. திருவாதிரை 4. சிவராத்திரி

13) கிருஷ்ண பகவானால் அருளப்பட்ட நூல்

1. மகாபாரதம் 2. இராமாயணம் 3. பகவத் கீதை 4. உபநிடதம்

14) வேதங்களுள் மந்திரங்களும்,பிராமணங்களும் அடங்கும் காண்டம்

1. ஞானகாண்டம் 2. தர்மகாண்டம் 3. உபாசனாகாண்டம் 4. கர்மகாண்டம்

15) மனுநீதிகண்ட சோழனின் மகன்

1. உபமன்யு 2. வீதிவிடங்கன் 3. அபிமன்யு 4. பிரகலாதன்

16) அப்பர் பெருமான் இறுதியாக பாடிய பதிகம்

1. மாதர்ப் பிறைக்கண்ணி 2. எண்ணுகேன் என்சொல்லி

3. பண்ணினேர் மொழியாள் 4. பொன்னார் திருவடிக்கு

17) திருமந்திரம் உணர்த்தும் பேருண்மையானது

1. அறம் செய்யவிரும்பு 2. ஊக்கமதுகைவிடேல்

3. அன்பேசிவம் 4. ஐயம் இட்டுண்

18) யாழ்நூல்,மதங்கசூளாமணி என்னும் நூல்களை எமக்களித்தபெரியார்

1. சுவாமிவிபுலானந்தர்
2. சுவாமிவிவேகானந்தர்
3. யோகர்சுவாமிகள்
4. செல்லப்பாசுவாமிகள்

19) சைவசித்தாந்தம் கூறும் இறைவனின் அருள் ஆன்மா மீதுபடிதலைக் குறிப்பது

1. இருவினையொப்பு 2. பலபரிபாகம் 3. சிவஞானம் 4. சத்திநிபாதம்

20) "மந்திரமாவதுநீறு"என்ற திருநீற்றுப் பதிகம் பாடியவர்

1. திருநாவுக்கரசர்
2. திருஞானசம்பந்தர்
3. சுந்தரமூர்த்திநாயனார்
4. மாணிக்கவாசகர்

21) வைரவரின் மறு பெயர்களில் ஒன்றாக விளங்குவது

1. சேத்திரபாலர் 2. கார்த்திகேயன் 3. மூத்தநாயனார் 4.பாலறாவாயர்

22) ஸ்ரீதட்சிணகைலாயம் பாடி சிறப்பிக்கப்படும் சிவாலயம்

1. முன்னேச்சரம் 2. திருக்கோணேச்சரம் 3. நகுலேச்சரம் 4. திருக்கேதீச்சரம்

23) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் கொடிக்கம்பத்தின் உயரமாக கருதப்படுவது

1.60 அடி 2.90 அடி 3.70 அடி 4.48 அடி

24) நல்லூர் கந்தசுவாமிகோவிலின் மூலமூர்த்தியாக விளங்குபவது

1. மயூரம் 2. வேல் 3. சூலம் 4. நாகம்

25) நயினைநாகபூசணிஅம்மன் ஆலயத்தின் தீர்த்தத் திருநாள்

1. மாசிமகம் 2. வைகாசிவிசாகம் 3. பங்குனிஉத்தரம் 4. ஆனிப்பூரணை

26) வரதபண்டிதரின் பிறந்த ஊராவது

1. வேம்படி 2. நல்லூர் 3. சுன்னாகம் 4. புன்னாலை

27) வசிஷ்ட மகரிஷியின் துணைவியாரின் பெயர்

1. அருந்ததி 2. தமயந்தி 3. மண்டோதரி 4. ஜானகி

28) மனிதர் ஏனையோரை நேசித்து, உதவி புரிந்து அரவணைத்து வாழ்தல்

1. கொல்லாமை 2. ஒப்புரவு 3. வாய்மை 4. பரோபகாரம்

29) பஞ்சாங்கத்தின் துணைகொண்டு நாம் அனுட்டிப்பவை

1. பிறப்பு, இறப்பு 2. இரவு,பகல்

3. விரதம்,பண்டிகை 4. விருந்தோம்பல்,பிறந்தநாள்

30) வேதங்கள் செவிவழியாக பேணப்படுவதால் அவற்றுக்கு வழங்கும் பெயர்

1. அபௌருஷேயம் 2. சுருதி 3.ஆரணியம் 4. எழுதாமறை

31) சுந்தரர் தன் வலக்கண் பார்வையைமீளப் பெற்றதலம்

1. திருவாரூர் 2. திருக்கழுமலம் 3. திருப்புன்கூர் 4. தில்லை

32) "யாழ் முரி" பண்ணில் அமைந்த பதிகம்

1. துணிவளர் திங்கள் 2. சதுரம் மறை

3. மாதர் மடப்பிடியும் 4. மந்திரமாவதுநீறு

33) ஆகமத்தின் சாரமாய் அமைந்த நூல்

1. திருப்புகழ் 2. திருவாசகம் 3. திருவிசைப்பா 4. திருமந்திரம்

34) "சகலாகமபண்டிதர்" எனச் சிறப்பிக்கப்படுபவர்

1. அருண்மொழித் தேவர் 2. அருணந்திசிவாச்சாரியார்

3. மெய்கண்டதேவர் 4. அச்சுதக்களப்பார்

35) சிறுதெய்வங்களை கொண்ட தொகுதி

1. நாகதம்பிரான், இடும்பன்,மாடசாமி
2. விநாயகர்,முருகன்,சூரியன்
3. உருத்திரன்,மகாவிஷ்ணு,பிரம்மன்
4. நடராஜர்,தட்சிணாமூர்த்தி,பிச்சாடனர்

36) மிகப் பழமையான சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்ட இடம்

1. கந்தளாய் 2. கண்டி 3. கீரிமலை 4. அனுராதபுரம்

37) களுதாவளைபிள்ளையார் கோயிலின் தலவிருட்சமாய் விளங்குவது

1. அரசமரம் 2.நாகமரம் 3.ஆலமரம் 4. வில்வமரம்

38-40 வரையான வினாக்களுக்குஅட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையை தெரிவு செய்க.

| இறைவன் | விரதம் | மாதம் |
|---|---|---|
| A. விநாயகர் | D. கந்த சஷ்டி | G. கார்த்திகை |
| B. சக்தி | E. பெருங்கதை | H. ஐப்பசி |
| C. முருகன் | F.நவராத்திரி | I. புரட்டாதி |

38) விநாயகர் சஷ்டியுடன் தொடர்புடைய தொகுதி

1.AEG 2.ADG 3.AEH 4.ABD

39) முப்பெரும் தேவியருடன் தொடர்புடைய தொகுதி

1.BCF 2.BEH 3.BFI 4.BDG

40) சூரசம்ஹாரத்துடன் தொடர்புடைய தொகுதி

1.CFI 2.CFG 3.CDF 4.CDH

## பகுதி 2

**முதலாம் வினாவும்,இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடைஎழுதுக.**

**முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொருவினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

1) சுருக்கமாகவிடைஎழுதுக.

1. திருஞானசம்பந்தரின் மறுபெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. படைத்தல் என்பதனால் கருதப்படுவது யாது?
3. சைவஆசார வகைகள் எவை?
4. அக பூசைக்குரிய அட்டபுஸ்பங்களில் இரண்டினை எழுதுக.
5. பாரதியார் தவம் எனக் குறிப்பிடுவது யாது?
6. நவக்கிரகங்கள் யாவை?
7. நாம் தீபாவளியை எப்போது கொண்டாடுகிறோம்?
8. திருமணச் சடங்குகள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. சண்மதம் என்பதினுள் அடங்குவன யாவை?

10) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் அமைந்துள்ள மாவட்டம் யாது?

2) மேல் வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

1.“அங்கமும் வேதமும்”.....

2.“பால் நினைந்தூட்டும்”.....

3.“கற்றவர் விழுங்கும்”....

4.“தண்ணளிவெண்குடை”....

5.“விநாயகனே வெவ்வினையை”....

3) “வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படு துய்யசொல் லரசர் தாடொழுது போற்றுவோம்.”

1. திருநாவுக்கரசரின் தாய்,தந்தை யாவார்?
2. அவர் தாண்டகவேந்தர் என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
3. அவரின் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள் ஐந்திணை எழுதுக

4)“ கோயில் இல்லாஊரில் குடியிருக்க வேண்டாம்”

1. கோயில் என்பதன் பொருள் யாது?
2. பரிவார தெய்வங்கள் என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?
3. கோயிலில் நடைபெறும் நித்திய பூசையினை சுருக்கமாக விளக்குக.

5) “அகரவுயிர்போல் அறிவாகிஎங்கும் நிகரில் இறைநிற்கு நிறைந்து”. (திருவருட்பயன்)

1. சித்து, அசித்து என்பதனால் கருதப்படுவன யாவை?
2. தடத்தநிலை என்றால் என்ன?
3. இறைவனின் பஞ்ச கிருத்தியங்களை விளக்குக.

6) “அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள் ஆவர்”

1. திருமூலரின் வரலாற்றைக் கூறும் நூல் யாது? ஆதனை எழுதியவர் யார்?
2. தமிழாகமம் எனவழங்கும் நூல் யாது? அதன் அமைப்பு எவ்வாறு உள்ளது?
3. தமிழாகமம் கூறும் ஐந்து விடயங்களை குறிப்பிடுக.

7) எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

1. தீபாவளி
2. வாய்மை
3. புரட்டாதிசனி
4. சைவவித்தியாவிருத்திச் சங்கம்

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
**Year End Evaluation**

පිළිතුරු පත්‍රය
**Marking Scheme**

ශ්‍රේණිය / தரம் / Grade: 10

විෂයය / பாடம் / Subject: சைவநெறி

விடைகள்

| | |
|---|---|
| 1. 3 | 21. 1 |
| 2. 4 | 22. 2 |
| 3. 1 | 23. 1 |
| 4. 2 | 24. 2 |
| 5. 1 | 25. 4 |
| 6. 4 | 26. 3 |
| 7. 2 | 27. 1 |
| 8. 3 | 28. 2 |
| 9. 1 | 29. 3 |
| 10. 4 | 30. 2 |
| 11. 2 | 31. 1 |
| 12. 1 | 32. 3 |
| 13. 3 | 33. 4 |
| 14. 4 | 34. 2 |
| 15. 2 | 35. 1 |
| 16. 2 | 36. 3 |
| 17. 3 | 37. 4 |
| 18. 1 | 38. 1 |
| 19. 4 | 39. 3 |
| 20. 2 | 40. 4 |

(1×40=40புள்ளிகள்)

**பகுதி 2**

**விடைகள்**

1) 1. பாலறாவாயர்,

ஆளுடையபிள்ளையார், தென்புகலி வேந்தன்

2. இறைவன் ஆன்மாக்களுக்காக தனு,கரண,புவன போகங்களை உருவாக்குதலே படைத்தல் எனப்படும்.
3. அகஆசாரம்,புறஆசாரம்
4. கொல்லாமை ,ஐம்பொறி அடக்கம் ,பொறுமை ,அறிவு
5. பிறரிடம் அன்புகாட்டுதலே உயர்ந்த தவமாகும்.
6. சூரியன், சந்திரன் ,செவ்வாய் ,புதன் வியாழன் சுக்கிரன் ,சனி ,ராகு ,கேது
7. ஐப்பசிமாத கிருஷ்ணபட்சசதுர்த்தசிதினத்தில் கொண்டாடுகிறோம்.
8. காப்புகட்டல் ,கன்னிகாதானம், மங்கலநாண் கட்டுதல், மாலைமாற்றல், அம்மிமிதித்தல்
9. இந்துசமயத்தின் சைவம் ,சாக்தம் ,வைணவம் ,காணபத்தியம் ,கௌமாரம் ,சௌரம் எனும் ஆறு பிரிவுகளும் சண் மதம் எனப்படும்.
10. மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளது.

(2×10=20புள்ளிகள்)

2) பாடல்களில் எழுத்துப் பிழைகளை அவதானித்து புள்ளி வழங்குக.

- 6 எழுத்துப் பிழைகள் இருந்தாலும் 3 புள்ளிகள் வழங்கலாம்.
- 7-9 எழுத்துப்பிழைகள் வரின் 2 புள்ளிகள் வழங்குக.
- 10-11 எழுத்துப்பிழைகள் வரின் 1 புள்ளிகள் வழங்குக.
- வரிக்கிரமம் பிழையாயின் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

| | | |
|---|---|---|
| (1) | பாடல் | 3×2 =06 புள்ளிகள் |
| (11) | பொழிப்புரை | 2×2=04புள்ளிகள் |
| | மொத்தம் | 10புள்ளிகள் |

3) I. தாயார்- மாதினியார்

தந்தையார் -புகழனார் (2 புள்ளிகள்)

II.திருத்தாண்டகம் என்னும் பதிகத்தைப் பாடிமையால் தாண்டகவேந்தர் என அழைக்கப்பட்டார்.

(3 புள்ளிகள்)

III.

- -சமணர்களால் நீற்றறையில் பூட்டப்பட்டு 7 நாட்களுக்குப் பின் உயிருடன் மீண்டமை.
- 2. நஞ்சுகலந்தபால் சோற்றை உண்டு உயிர்தப்பியமை.
- 3. ஏவப்பட்டயானைவலம் வந்துவணங்கியமை.
- 4. கல்லுடன் கட்டிகடலில் போட்டபோதுகல் தெப்பமாகமிதந்தமை.
- 5. சிவபெருமானிடம் படிக்காசுபெற்றமை

(5புள்ளிகள்)

4. i. கோ-அரசன், இல்-இருப்பிடம் அரசருக்கெல்லாம் அரசனான இறைவனின் இருப்பிடம் எனப்படும்.

(2 புள்ளிகள்)

Ii .மூல மூர்த்தியைதவிர்த்து இறைவனின் தோற்றம் பேதங்களைக் குறிக்கும் விக்கிரகங்கள் பரிவாரதெய்வங்கள் எனப்படும்.

(3 புள்ளிகள்)

iii. அதிகாலையில் சுவாமியைமங்கலவாத்தியம்

- முழங்கதிருப்பள்ளியெழுச்சிபாடிபள்ளிஎழுந்தருளச் செய்வர்.
- திருமுழுக்குச் செய்து, வஸ்திரம் சாத்தி,ஆபரணங்கள் அணிவிப்பர்
- பலவர்ணமலர் மாலைகளினால் அலங்கரிப்பர்.
- தீப தூபம் காட்டிஉபசாரம் செய்வர்.
- மலர்களால் அர்ச்சித்துநெய்வேத்தியம் படைப்பர்.

(5 புள்ளிகள்)

(5 ) I. சித்து-பதி(அறிவித்தால் அறியும் பொருள்)

அசித்து-பாசம் (அறிவித்தாலும் அறியமாட்டாதபொருள்)

(2 புள்ளிகள்)

II. இறைவன் தன்னுடையபறவைநிலையிலிருந்து இறங்கிஅருவம்,உருவம்,அருவுருவம் எனும் மூவகை திருமேனிகளையும் கொண்டருளும் நிலை தடத்தநிலை எனப்படும்.

(3 புள்ளிகள்)

III.

- படைத்தல்-ஆன்மாக்களுக்காகதனு,கரண,புவனபோகங்களைஉருவாக்குதல்.
- காத்தல்-படைக்கப்பட்டவை இருக்கவேண்டியகாலம் வரைஅவற்றைகாத்தல்
- அழித்தல்-படைக்கப்பட்டவற்றின் காலம் முடியஅவற்றைஅழித்தல்
- மறைத்தல்-ஆன்மாவைபீடித்துள்ளமலங்களின் வீரிபத்தைதடுத்தல்
- அருளல்-ஆன்மாவின் மலபந்தத்தைநீக்கிஅவற்றிற்குபேரின்பத்தைஅருள்

(5 புள்ளிகள்)

6)I. பெரியபுராணம்

சேக்கிழார் (2 புள்ளிகள்)

II. திருமந்திரம்

ஒன்பது ஆகமங்களின் சாரத்தையும் ஒன்பது தந்திரங்களில் அமைத்து பாடப்பட்டுள்ளது.

(3 புள்ளிகள்)

III.

- உலக வாழ்க்கைக்கு தேவையான ஒழுக்கங்கள்.
- உள்பொருள் பற்றிய விளக்கங்கள்.
- ஆன்மாக்கள் இறைவனை அடைவதற்கான மார்க்கங்கள்.
- சிவசின்னங்களின் முக்கியத்துவம்
- குரு லிங்க சங்கம வழிபாடு
- முக்தி
- ஆலயக் கிரியைகள்,வீட்டுக்கிரியைகள்

(5 புள்ளிகள்)

7) தலைப்பினைவிளங்கும் வகையில் பந்தியாகவிடயங்களைத் தொகுத்துஎழுதி இருப்பின் புள்ளிவழங்குக.

(5×2 =10புள்ளிகள்)